(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் Tamil | Three Hours / Gr -12 (2023) | 72 | T | I,II |

❖ பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள இரு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

01. பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) கன்று தன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தமையா யாயின் மென்சீர்க்
கலி மயிற் கலாவத் தன்னவிவள்
ஒலி மென் கூந்த லுரியவால் நினக்கே.

1) இச் செய்யுளின் பொருளை இக்கால மொழி நடையில் எழுதுக.
2) இச் செய்யுளில் தோழியின் மதி நுட்பம் வெளிப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.
3) இச்செய்யுளில் இறைச்சிப் பொருள் கையாளப்பட்டுள்ளவாற்றை இனங்கண்டு விளக்குக.

(4+3+3=10 புள்ளிகள்)

ஆ) மா முனிவர்க்கு உறவாகி வனத்திடையே வாழும்
கோ முனியத் தகும் என்று மனத்து இறை கொள்ளாதே
ஏமுனை உற்றிடில் ஏழு கடற்படை என்றாலும்
ஆ முனையின் சிறு கூழ் என இப்பொழுது ஆகாதோ.

1) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை எழுதுக?
2) ‘இராமனுக்கு உற்ற உயிர்த்துணைவன் குகன்’ என்பதற்கு இச் செய்யுளிலிருந்து ஆதாரங்களை முன்வைக்குக.
3) இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.

(3+3+4 = 10 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**02. மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1) பின்வருவனவற்றுள் உடன்படுமெய்யாக வரக்கூடிய எழுத்து.
   1) ய்　　2) ஞ்　　3) ட்　　4) க்　　5) ந்　　(　　)

2) காலங் காட்டாத தொழிற்பெயருக்கு உதாரணமாக அமைவது.
   1) போகின்றது　　2) படித்தது　　3) ஓடியமை
   4) வந்தார்　　5) பாடுதல்　　(　　)

3) வந்தோரால் இப்பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் வந்தோரால் என்பது
   1) தொழிற்பெயர்　　2) கூட்டுப்பெயர்　　3) எண்ணுப்பெயர்
   4) ஆக்கப்பெயர்　　5) வினையாலணையும் பெயர்　　(　　)

4) இரப்பவர்க்குப் பொன்னைக் கொடுத்தான் என்பதில் வந்துள்ள வேற்றுமைப் பொருள்.
   1) முறைக்கியைப் பொருள்　　2) தகுதியுடைப் பொருள்　　3) கோடற் பொருள்
   4) காரண காரியப் பொருள்　　5) அனுபவப் பேற்றுப் பொருள்　　(　　)

5) கீழ்வருவனவற்றுள் தற்சமமாக அமையாத சொல்.
   1) கமலம்　　2) அரசன்　　3) குங்குமம்
   4) காரணம்　　5) அமலம்　　(　　)

6) இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கு உதாரணம் அல்லாதது.
   1) சுறாமீன்　　2) சாரைப் பாம்பு　　3) இன் சொல்
   4) ஆசிரியர் தமிழன்பன்　　5) கதலிவாழை　　(　　)

7) மற்றும் பலர் என்பது எவ்வகைத் தொடர்
   1) வேற்றுமைத் தொடர்　　2) வினைத் தொடர்　　3) வினை முற்றுத் தொடர்
   4) இடைச் சொற்றொடர்　　5) உரிச் சொற்றொடர்　　(　　)

8) கீழ்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டும் வினைச் சொல்.
   1) இருந்தான்　　2) கண்டான்　　3) படித்தான்
   4) ஆடினான்　　5) விட்டான்　　(　　)

9) பின்வருவனவற்றுள் செயற்படுபொருள் குன்றிய வினை வாக்கியமாக வருவது.
   1) கண்ணன் பாட்டுப் பாடினான்.
   2) மாலதி படித்தாள்.
   3) தர்மன் ஓடினான்.
   4) குமரன் பந்தை எறிந்தான்.
   5) கமலா சமைத்தாள்.　　(　　)

10) பின்வருவனவற்றுள் உருபு மயக்கமாக அமைந்துள்ள வாக்கியம்.
   1) கத்தியால் வெட்டினான்.
   2) கூலிக்கு வேலை செய்தான்.
   3) காலத்தினால் செய்த உதவி.
   4) பொன்னை உருக்கினான்.
   5) வீட்டைக் கட்டினான்.　　(　　)

(10 x 2 = 20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.**

அ) இன்றைய பொருளாதார நெருக்கீடுகளும் மக்கள் வாழ்வியலும்.

ஆ) சமுக சமத்துவமும் தேசிய ஒருமைப்பாடும்.

இ) பேராசிரியர் க. கைலாசபதியின் தமிழ்ப் பணிகள்.

ஈ) மனித வாழ்வில் சமயத்தின் வகிபாகம்.

உ) அறிவுடையார் எல்லாம் உடையார்.

(20 புள்ளிகள்)

## பகுதி II

❖ **எவையேனும் இரு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**04.** திருக்குறள் - வலியறிதல் எனும் அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

அ) வலியின் பகுதிகளும் பயனும்

ஆ) அவ் வலிகளை அறியாதவிடத்து ஏற்படும் இழுக்குகள்

இ) பொருட் செல்வத்தின் வலியறிதற் சிறப்புக்கள்

(20 புள்ளிகள்)

**05.** அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அவற்றின் பொருள் மரபிற்கேற்ப பாகுபடுத்துக.

ஆ) சங்கமருவிய கால அற இலக்கியப் பண்புகளை ஆராய்க.

இ) சங்கமருவிய கால – பல்லவர் கால இலக்கியங்களுக்கிடையிலான ஒற்றுமைகளை இனங்கண்டு விளக்குக.

**06.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) கங்கைக் கரைநோக்கி வரும் பரதன் படை கண்டு குகன் உரைத்த வீர மொழிகள்.

ஆ) ஊர்காண்காதையில் நீர் கற்ற பாடலடிகளுடாக வெளிப்பட்ட கவுந்தியடிகளின் அறக்கருத்துக்களும், வாழ்வியற்படிப்பினைகளும்.

இ) தேர் என்னும் சிறுகதையின் கதைப்பின்னலும் எடுத்துரைப்பு முறையும்.

ஈ) ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சமய உணர்வு மேலோங்கிக் காணப்பட்டமைக்கான பின்புலங்கள்

(20 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!